1987 ஏப்ரல் 3]

அவர்களுடைய அறுவடை முழுவதும் கிடைத்து, கட்டக்கூடிய அளவுக்கு 28-2-1987 வரை காலம் நீட்டிக்கப்பட்டது. இந்த அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 28-2-1987 வரை பல்வேறு கட்சித் தலைவர்கள், குறிப்பாக தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப் பட்டதாகச் சொன்னார்கள். அது வரவேற்கத் தக்கது. ஆனால் வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லை. வசதிபடைத்தவர்களிடம் வசூல் செய்ய வேண்டும்; அவர்கள் கட்டாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் வறட்சியின் காரணமாக ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாமல், கட்ட இயலாமல் இருக்கிறவர்களுக்கு, முடியாமல் இருப்பவர்களுக்கு அரசாங்கம் கடனை ஒத்திவைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இயலாதவர்கள் என்ற கணக்கை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது, எந்த ஸ்கேலை வைத்து அளந்து பார்ப்பது என்று தெரியவில்லை. இயலாதவர்கள் எல்லாம் திருமணம் நடத்து கிறார்கள், திருவிழா நடத்துகிறார்கள், கும்பாபிஷேகம் பண்ணு கிறார்கள், யாகசாலை நடத்துகிறார்கள், கஜபூஜை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு செலவுகளுக்கு இடம் கொடுக்கும்போது இந்த சாதாரண கடன் பணத்தைக் கட்ட முடியாதவர்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, இப்போது இருக்கிற நிலைமை நடைமுறையில் இருக்கிறது. நிலைமைகளை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது.

சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி.

266—(*வினா எண். 12155) திரு சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சைதை தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் புதிய சுயசேவைப் பிரிவு அங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மொத்தம் எத்தனை சுய சேவைப் பிரிவு அங்காடிகள் கூட்டுறவுத் துறையில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? விரிந்து, பரந்துகொண்டிருக்கிற சென்னை

மாநகரில் நுழை வாயிலாக இருக்கிற எனது தொகுதியில் புதிதாக சுய சேவைப் பிரிவு அங்காடி திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, அண்ணாநகர், திருவல்லிக்கேணி நகர் கூட்டுறவுச் சங்கம், அண்ணாசாலை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, மற்றும் பெசன்ட் நகர், திருவல்லிக்கேணி, அசோக் நகர் ஆகிய இடங்களிலும் கூட்டுறவுவிற்பனைப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. பூங்கா நகர் மொத்த விற்பனைப் பண்டகசாலை சுய சேவைப் பிரிவை வைத்து நடத்திக் கொண்டு வருகிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் காமதேனு மொத்த விற்பனைச் சிறப்பங்காடியானாலும் சரி, திருவல்லிக்கேணி டி.யு.சி. எஸ்-ஆனாலும் சரி இரண்டும் பெரும் நஷ்டத்தில்தான் இயங்கி வருகின்றன. இந்த நிலையிலே விரிவாக்கம் செய்யவேண்டுமா, சைதைக்குப் போனால் இலாபகரமாக இருக்குமா என்பன எல்லாம் சந்தேகத்திற்குரியனவாகத்தான் இருக்கின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காமதேனுவும், டி.யு.சி.எஸ்-ம் நஷ்டத்தில் இயங்குவதற்கு என்ன காரணம்? அப்படி நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணங்கள் பலப்பல இருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துச் சொன்னால் நேரம் இடம் தராது. ஆகவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து நட்டத்திலிருந்து மீட்டு இலாபகரமாக ஆக்கவேண்டும்; அதனுடைய முழுப்பலனை மக்கள் பெறவேண்டும் என்ற அடிப்படையில் முறைப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அப்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறபோது சைதைப் பகுதியும் பலன் பெறும்.